செய்தி வெளியீடு எண் : 47 நாள் :29.10.2019

**தேனி மாவட்டம்**
**சமூக பாதுகாப்புத்துறையின் சார்பில்**
**காலியாகவுள்ள பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:**

******

தேனி மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சார்ந்த), சட்டம் மற்றும் நன்னடத்தை அலுலவர், ஆற்றுப்படுத்துநர், சமூகப்பணியாளர் மற்றும் புறத்தொடர்பு பணியாளர் ஆகிய பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சார்ந்த) 1 பணியிடத்திற்கு பட்டதாரி / முதுகலை பட்டதாரி (10+2+3) சமூகவியல் / சமூக பணி, உளவியல், குழந்தை வளர்ச்சி, குற்றவியல், கல்வியியல் துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், குழந்தைகள் நலன் / சமூக நலன் / தொழிலாளர் நலம் சார்புடைய பணிகளில் 3 வருடம் பணிபுரிந்த அனுபவம் இருத்தல் வேண்டும். சட்டம் மற்றும் நன்னடத்தை அலுவலர் 1 இளங்கலை சட்டம் பட்டம் பெற்றிருக்க வேண்டும். குழந்தைகள் நலன் / சமூக நலன் / தொழிலாளர் நலம் சார்புடைய பணிகளில் ஒரு வருடம் பணிபுரிந்த அனுபவம் இருக்க வேண்டும்.

ஆற்றுப்படுத்துநர் 1 பணியிடத்திற்கு பட்டதாரி (10+2+3) உளவியல் / சமூகவியல் அல்லது முதுநிலை பட்டம் சமூக பணி (மருத்துவம் & உளவியல்) துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இத்துடன் குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் / குழந்தைகள் நலன் சார்புடைய பணிகளில் 2 வருடங்கள் பணிபுரிந்த அனுபவம் இருக்க வேண்டும். சமூக பணியாளர் 1 பணியிடத்திற்கு பட்டதாரி / முதுகலை பட்டதாரி (10+2+3) பட்டம் பெற்றவர்கள் இவர்களில் உளவியல் / சமூகப்பணி / வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்துடன் குழந்தைகள் நலன் / சமூக நலன் / தொழிலாளர் நலம் சார்புடைய பணிகளில் 2 வருடம் பணிபுரிந்த அனுபவம் இருக்க வேண்டும்.

*புறத்தொடர்பு பணியாளர் 1 பணியிடத்திற்கு 10 / 12ம் வகுப்பு தேர்ச்சி. குழந்தைகள் தொடர்பான சான்றிதழ் படிப்புகள் பெற்றிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும். இத்துடன் குழந்தைகள் நலன் சார்புடைய பணிகளில் ஒரு வருடம் பணிபுரிந்த அனுபவம் இருக்க வேண்டும். இப்பணியிடங்களுக்கு வயது வரம்பு: 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். மேற்கண்ட கல்வித்தகுதியுடன் அரசு அலுவலராக இருந்து ஓய்வு பெற்று, அரசிதழில் கொள்கை வரைவு மற்றும் களப்பணி நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக பணி செய்த அனுபவம் உள்ளவராவும், 62 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.*

*ஒருவருட ஒப்பந்த அடிப்படையிலான பணியிடம், நேர்முகத்தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படவுள்ளது. இப்பணியிடத்திற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், ஒருங்கிணைந்த அரசு பல்துறை வளாகம் - II, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தேனி - 625 531. (e.mail: sd.dcpu.theni2@gmail.com) முகவரிக்கு 10.11.2019 மாலை 5:45 மணிக்குள் விண்ணப்பித்து பயனடையுமாறு தெரிவித்துள்ளார்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***